தாலும், அதனால் தடை ஏற்படுவதாலும், அதன் காரணமாகப் பெரும் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதாலும், மாண்புமிகு முதல் அமைச்சருக்குக்கூட இந்த இடத்தில் விபத்து ஏற்பட்டது என்பதாலும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்களை விட்டு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : பொதுப்பணி அமைச்சருக்கும் விபத்து ஏற்பட்டது என்பதாலும், அப்படிப்பட்ட விபத்துக்களுக்கு ஆளாகாமல் இருக்கும் வண்ணம் அங்கே, நிரந்தரமாக அந்தப்பாலத்தை உடனடியாக அகலப்படுத்த அரசாங்கம் முன் வருமா?

திரு. கொளத்தூர் கோதண்டம் : நான் சொன்ன பாலமும், கனம் உறுப்பினர் சொல்லும் பாலமும் வெவ்வேறு.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் அமைச்சருக்கு விபத்து ஏற்பட்டது இந்த பாலத்தில் அல்ல. நான் குறிப்பிட்டது போல, மத்திய சர்க்காரிலிருந்து நிதி ஒதுக்கம் வந்த பிறகு இந்தப்பாலத்தை அகலப்படுத்தும் வேலையைச் செய்யலாம். இப்பொழுது 20 அடி இருக்கிறது, அதை 24 அடி அகலம் செய்ய வேண்டும் என்பதுதான் பரிசீலனையில் இருந்து வருகிறது.

Periyar and Vaigai Reservoirs.

* 105 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether the water level at Periyar lake and Vaigai Reservoir has been steadily going down during the second fortnight of the month of September 1967; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பயிரின் பருவகால தேவைக்கேற்பக் கூடுதலாக நீர் வழங்க வேண்டியதிருந்ததினாலும் குறைந்த அளவிலேயே இத்தேக்கங்களுக்கு நீர் வரத்து இருந்தமையாலும் இந்நிலைமையேற்பட்டது.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இந்தச் சூழ்நிலையில், அயல்நாடுகளில் செய்வது போல, செயற்கை மழையை உண்டாக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

Dam across Nambiyaru.

* 106 Q.—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal for the construction of an anicut across Nambiyar river to feed

1969 பிப்ரவரி 28]

the Nambikurichikulam, Nalanthula tank, Tharuvaikulam tank, Nanthankulam tank, Erumaikulam tank, Avaikalakulam tank and Aiyankulam tank in Radhapuram sub-taluk of Tirunelveli district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பல்வேறு குளங்களுக்குத் தண்ணீர் வசதி அளிப்பதற்காக சிறிய நீர்த்தேக்கம் ஒன்றைக் கட்டுவது பற்றிய திட்டத்தைப் பொதுப்பணித்துறை ஆய்வு செய்து வருகிறது.

திரு. டி. மார்டின் : பேரவைத்தலைவர் அவர்களே, இராதாபுரம் வட்டாரத்தில் பஞ்ச நிவாரண வேலை செய்ய நம்பியாற்றில் அணைக்கட்டு கட்டினுல், அதன் காரணமாக அங்கே உள்ள குளங்களுக்கு அதிகமான நீர் கிடைத்து விவசாயம் அபிவிருத்தி ஆகும் என்கிற காரணத்தால், அங்கே பஞ்ச நிவாரண வேலை அடிப்படையில் முன்கூட்டியே இந்த வேலைகளைச் செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் கருத்தைப் பரிசீலிக்கலாம்.

எஸ்பிளனேடிலுள்ள கதர் விற்பனை நிலையம்.

*107 வினு—திரு. ஏ. எம். இராஜா : } மாண்புமிகு
திரு. கொளத்தூர் கோதண்டம் :
உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, எஸ்பிளனேடில் இப்போது கட்டப்பட்டு வரும் கதர் விற்பனைப் பெரு நிலையத்தின் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு ?

(இ) ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு குறைந்த ஒப்பந்த தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ரூ. 71.15 லட்சம்.

(இ) ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. மிகக் குறைந்த ஒப்பந்தப் புள்ளி ஏற்கப்படவில்லை.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, ஒப்பந்தப் புள்ளிகள் விளம்பரங்கள் செய்தித்தாள்களில் வெளியிடப்பட்டனவா? ஆம் எனில், எந்த எந்த பேப்பர்களில் வெளியிடப்பட்டன, எந்த எந்த தேதிகளில் வெளியிடப்பட்டன என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஒப்பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டன. அந்த விவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : குறைந்த டெண்டர் வரவழைக்கப்பட்டும், மீண்டும் (எஸ்டிமேட்) ரிவைஸ் செய்யப்பட்டு, பிறகு இந்த மாநில முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்கு